13

பிறவி

கமலினி கட்டுண்டு அமர்ந்திருந்தாள். இரத்த நாளங்கள் எல்லாம் விறைத்துப் புடைத்து நின்றன. இதயம் வேகமாக அடித்துக் கொள்ளக் கண்களில் குளமாகக் கண்ணீர் நின்றது.

சின்னத் திரையில் தெரிந்த அந்தக் காட்சி ஏதும் நிழற்பட மில்லை. அந்தக் கிழவரின் சோகம், கவலை, பயம் எல்லாம் அவள் அனுபவித்த உணர்வுகள். தினம் தினம் தோணியில் ஏறி ஆற்றைக் கடந்து மகன் வருவானா என்று பஸ் நிலையத்துக்குச் சென்று காத்து சோர்ந்து திரும்பும் அந்தக் கிழவரிடம் ஓ எனக்குப் புரிகிறது உங்கள் துக்கம் என்று சொல்ல வேண்டும் போல இருந்தது. நீங்கள் காத்திருந்து பிரயோஜனமில்லை. உங்கள் மகன் வரமாட்டான் என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது.

காற்றின் அசைவுக்கெல்லாம் மகன் வந்து விட்டானா என்று அவர் ஆர்வத்துடன் நிமிர்ந்து பார்க்கும் போது இப்படித்தான் நானும் இருந்தேன் என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

இன்னமும்கூட வாசல் மணி ஓசை கேட்கும்போது என்றோ முடங்கி விட்ட எதிர்பார்ப்பு, மீண்டும் மீண்டும் தன்னிச்சையாக எட்டிப் பார்க்கிறது.

கிழவர் நடையாய் நடக்கிறார். போலீஸ் ஸ்டேஷனுக்கும், அரசியல்வாதிகளுக்குமாய் - அவள் நடந்த மாதிரி. உங்கள் மகன் திரும்பிவர முடியாத தொலைவுக்குப் போய்விட்டான் என்று அந்தக் கோழைகளுக்குச் சொல்லத் துணிவில்லை. அவர்கள் வாயிலிருந்து அந்த வார்த்தை வராத வரையில் நம்பிக்கை உண்டு என்கிற அஞ்ஞானத்தில் அந்தக் கிழவர் தினமும் தோணியில் அமர்ந்து நதியைக் கடந்து பஸ் நிலையத்தில் பழியாய் காத்திருந்து காத்திருந்து வீடு திரும்புகிறார் - சித்தம் கலங்கும்வரை.

ஒரு வித்தியாசம். கமலினிக்குச் சித்தம் கலங்கவில்லை. கலங்காமல் போனது ஆச்சரியம்தான். உடம்புகூட நன்றாகத்தான் இருக்கிறது. பசிக்கிறது. உள்ளே செல்லுவதையெல்லாம் ஜீரணித்துக் கொள்கிறது - மனசு அந்த இழப்பை ஜீரணித்துக் கொண்ட மாதிரி.

படம் முடிந்து விட்டது.

கமலினி எழுந்து டி.வி.யை அணைத்துப் படுக்கைக்குச் சென்று படுத்துக் கொண்டாள். இப்பொழுதெல்லாம் இதுதான் வேலை. பிடிக்கிறதோ இல்லையோ டி.வி.யில் வரும் எல்லா சொத்தை நிகழ்ச்சிகளையும் பார்ப்பது அல்லது தூங்குவது. சபாபதி திடீரென்று போன வருஷம் மாரடைப்பு வந்து பதினைந்தே நிமிஷத் தவிப்புக்குப் பிறகு இறந்ததிலிருந்து இப்படித்தான். யாருக்காக வாழ வேண்டும் என்று புரியாத நிலையில் எப்படி வாழ்ந்தாலும் ஒன்றுதான் என்று மனசு சோம்பிப் போய்விட்டது. முடிந்தால் சமையல். அதுவும் ஒரு ரஸம் அல்லது குழம்பு. இல்லாவிட்டால் பழமோ, பாலோ, ப்ரெட்டோ. மற்ற நேரங்களில் டி.வி., தூக்கம். புத்தகம் படிப்பதில்கூட இப்பொழுது நாட்டமில்லை. எதைத் தெரிந்து கொண்டுதான் என்ன ஆக வேண்டும் இனிமேல் என்கிற வைராக்கியம் வந்து எத்தனை வருஷங்கள் - ஆ பதினைந்து வருஷங்கள் ஆகின்றன.

அதற்கு முன்பு வாழ்ந்த வாழ்வே வேறு. நாளையைப் பற்றிய நம்பிக்கை கொண்ட வாழ்வு. இன்றைய சந்தோஷங்களின் நிறைவு

கொண்ட வாழ்வு. வாழ்வதில் அர்த்தமிருந்தது. காணும் பொருள் களில் எல்லாம் அழகு தெரிந்தது. எத்தனை கோடி இன்பம் வைத்தாய் என்று நன்றி சுரந்த நாட்கள் அவை.

தலை மேல் இடி விழாத வரைதான் இந்த நம்பிக்கையும், நன்றியும் என்று கமலினிக்கு இப்பொழுது புரிகிறது. காரண மில்லாமல் விழுந்த இடியும், அதைத் தாங்கிக் கொள்ள வழி தெரி யாமல் சுமைதாங்கிகளைப் தேடி அலைந்து ஏதும் கை கொடுக்க வில்லை என்கிற ஏமாற்றமும் இன்றும் சில சமயங்களில் ஆத்திரமாய் வெளிப்படுகிறது. அல்லது கண்ணீராய் வெளிப்படுகிறது.

''எதுக்கும்மா நீ தனியா டில்லியிலே இருக்கணும்?'' என்று பதினைந்து நாள் முன்பு கீதா நியூயார்க்கிலிருந்து ஃபோன் செய்தாள்.

''இங்கே வந்துடு. உன்னைப் பத்தி எனக்குக் கவலையாயிருக்கு.''

மாதத்துக்கு இரண்டு முறை செய்து விடுகிறாள். இதே கேள்விதான் எப்பவும்.

ஏன் இங்கே உக்காந்திருக்கே?

கமலினிக்கு இன்றுவரை அந்தக் கேள்விக்கு விடை தெரியவில்லை.

''எல்லாத்தையும் வித்துட்டு இங்க வந்துடும்மா.''

''வித்துட்டு? அமெரிக்கா பிடிக்கல்லேன்னா அப்புறம் எங்க போய் நிக்கறது?''

''அமெரிக்கா பிடிக்காம போகாது. அங்க மட்டும் என்ன செய்யறே? வீட்டுக்குள்ளதானே உக்காந்திருக்கே? இங்க எங்ககூட இருக்கிறதும், பேரன், பேத்திகளோட இருக்கிறதும் பிடிக்காம போயிடுமா?''

''எனக்குச் சொல்லத் தெரியல்லே கீதா. நாலு மாசத்துக்கு வேணா வரேன்.''

''எப்போ?''

''யோசிச்சு சொல்றேன்.''

''என்ன யோசனை? டிக்கெட் நா அனுப்பறேன். தீபாவளிக்கு இங்க வந்துடு.''

''வேண்டாம், வேண்டாம். நா முடிவு செஞ்சப்புறம் தெரிவிக்கறேன். அப்புறம் அனுப்பு.''

இப்படிச் சொல்லி எத்தனையோ மாதங்கள் ஆகிவிட்டன.

ஃபோன் ஒலித்தால் அது கீதாவாக இருக்குமோ, அவள் கேட்கும் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று பதைப்பு ஏற்படுகிறது.

கமலினிக்கு மீண்டும் சற்றுமுன் திரையில் பார்த்த அந்தக் கிழவரின் முகம் நினைவில் நின்றது. கிழவரின் இடத்தில் தான் நிற்பது போல் இருந்தது. போலீஸ்காரர்களும், அரசியல்வாதிகளும் அவரிடம் ஏன் உண்மையைச் சொல்லவில்லை என்று இப்பொழுது புரிந்தது. அவர்கள் சொல்லியிருந்தாலும் கிழவர் நம்பியிருக்க மாட்டார், அவள் நம்பாதது போல.

''உனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கா?'' தினமும் ஏன் சாதத்தை வடிச்சு வெச்சுக் காத்திண்டிருக்கே?''

''பசின்னு ஒருத்தன் வந்து நின்னான்னா உடனே சாப்பிடும் படியா இருக்க வேண்டாமா?''

இப்படித்தான் அந்தக் கிழவர் தினம் தினம் ஆற்றைக் கடந்து பஸ் நிலையத்தில் நின்றார்.

''அப்பாவைப் பார்க்கணும்னு வந்து நின்னான்னா அவரைக் காணுமேன்னு ஏமாத்தமடைய மாட்டானா?''

அந்தக் கிழவருக்குக் கடைசியில் பைத்தியம் பிடித்துப் போனது நல்லதிற்குத்தான். தினம் தினம் அனுபவிக்கும் நரக வேதனையிலிருந்து கிடைத்திருக்கும் விமோசனம் அது. எனக்குத் தான் விமோசனத்துக்கு வழியே இல்லை. உயிரிருக்கும் வரை ஞாபகங்கள் இருக்கும். ஞாபகங்கள் இருக்கும் வரை வேதனையிருக்கும். அதனால்தான் இங்கிருந்து அமெரிக்கா போய்விடுவதால் நிலைமை மாறி விடாது என்று தோன்றுகிறது.

''டில்லி ரொம்ப மோசமாயிட்டதாமே?'' என்றாள் கீதா சென்ற முறை பேசியபோது. ''கொலை, கொள்ளையெல்லாம் அதிகமாயிடுத்தாமே? நீ தனியா இருக்கே! கொள்ளையடிக்க வந்து ஏதானும் செஞ்சுட்டுப் போயிட்டான்னா?''

கமலினிக்கு சிரிப்பு வந்தது.

அப்படி ஏதாவது நடந்தால்தான் தனக்கு விமோசனம் என்று தோன்றிற்று. சாவு தானாக வராது போல் இருந்தது. 'நீ தனியா இருக்காதே.' 'டில்லியிலே உனக்கு இனிமே என்ன வெச்சிருக்கு?'

கீதாவுக்குப் புரியாது. ஒரு ஆள் சாப்பிடும்படியான சாப்பாடு வீட்டில் ஏன் எப்பவும் அவள் வைத்திருந்தாள் என்று சபாபதி புரிந்து கொள்ளாத மாதிரி.

இப்பொழுதெல்லாம் சாப்பாட்டைச் செய்து வைத்து வீணாக்கும் நிலையில் அவள் இல்லை. ஆனால் திடீரென்று வந்து கதவை இடித்தால் திறக்க யாராவது இருக்க வேண்டாமா? கீதா சொல்றதை சொல்லட்டும். என்னாலே டில்லியை விட்டுக் கிளம்ப முடியாது...

லோசாகப் பசித்தது. கமலினி எழுந்தாள். இன்று இரவுக்காக ஏதும் சமைத்திருக்கவில்லை. காலையில் என்ன சமைத்தோம் என்றே ஞாபகமில்லை. ஃப்ரிஜ்ஜைத் திறந்து பார்த்தபோது கொஞ்சம் சாதமும், குழம்பும் இருந்தன. சில்லென்ற சாதத்தில் கொஞ்சம் தயிரை விட்டுப் பிசைந்து சாப்பிட ஆரம்பித்தாள். தனியாக இத்தனை பெரிய வீட்டில் இருப்பது சிரமமாகத்தான் இருந்தது. ஆனால் இங்கிருந்து கிளம்பிப் போய்விட வேண்டும் என்று தோன்றுவதேயில்லை. மேஜையைச் சுத்தம் செய்துவிட்டு டி.வி.யைப் போட்ட போது ஆங்கிலச் செய்தி வந்தது. டெலிபோனும் கூட ஒலித்தது. அவள் டி.வி.யை நிறுத்திவிட்டு டெலிபோனைக் கவனித்தாள்.

''அம்மா, அமெரிக்காவுக்குக் கிளம்பற தேதியைப் பத்தித் தீர்மானம் பண்ணியா?'' என்றாள் கீதா.

''இன்னும் பண்ணலைலே கீதா'' என்றாள் கமலினி தயக்கத்துடன்.

''ஏம்மா இப்படி?'' என்றாள் கீதா மனத்தாங்கலுடன். ''தீபாவளிக்கு இங்க வந்துடுன்னு சொன்னேனே?''

''அதுக்கு இன்னும் ஒண்ணரை மாசம் இருக்கே?''

''அதுக்கு இப்பவே ப்ளான் பண்ண வேண்டாமா?''

''பண்ணலாம்.''

''என்னதான் இருக்கும்மா உன் மனசிலே? ரகு இனிமேயும் வரப் போறான்னு எதிர்பார்த்திண்டிருக்கியா?''

கமலினி பேசவில்லை.

''அவன் இனிமே வரமாட்டான்மா. புரிஞ்சுக்கோ.''

கமலினிக்குச் சுரீரென்று கோபம் வந்தது.

''இதைச் சொல்லத்தான் போன் பண்ணியாடி நீ?''

''ஸாரிம்மா. நீ உண்மையைப் புரிஞ்சுக்கணும். பதினைஞ்சு வருஷமாச்சு அவன் காணாமப் போய். எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலே அது நேர்ந்ததுன்னு நினைவுபடுத்திக்கோ. திரும்பி வரணும்னா அப்புறம் வந்திருக்கலாம். வராம போனதாலே....''

கமலினிக்கு மூச்சு திணறிற்று. பகபகவென்று கோபம் எழும்பிற்று.

''போறும் கீதா. வேற ஏதாவது பேசு.''

''ஸாரிம்மா'' என்றாள் கீதா வருத்தம் தொனிக்க. ''நீ எதுக்கும் இங்க கிளம்பி வாம்மா. கற்பனையிலேயே வாழறது ஆபத்தும்மா. புரிஞ்சுக்கோ ப்ளீஸ்.''

''நீ என்னைப் புரிஞ்சுக்கறியோ கீதா?'' என்றாள் கமலினி லேசான அலுப்புடன். ''எனக்கு என் சொந்த வீட்டிலே இருக்கறதுதான் சமாதானம். என்னைக் கட்டாயப்படுத்தாதே. அக்கம்பக்கத்துக்காரங் கள்லாம் நல்லவங்கதான். எனக்கு உங்கிட்ட வரணும்னு தோணின உடனே உனக்கு ஃபோன் பண்ணறேன். என்ன?''

''ஓ. கே.'' என்றாள் கீதா சமாதானமில்லாமல். ''உடம்பைப் பார்த்துக்கோ. ஜாக்கிரதையா இரு. டில்லி இப்ப ரொம்ப மோசமாயிட்டதாம். ஜாக்கிரதை.''

''இருக்கேண்டி இருக்கேன். என்னைப் பத்திக் கவலைப் படாதே.''

''அம்மா, உனக்கு யாருமில்லேன்னு நினைக்காதே. நா இருக்கேன்.''

கமலினிக்குக் கண்ணில் நீர் நிறைந்தது. ''எனக்கு அது தெரியாதா கீதா?'' என்றாள் நெகிழ்ந்து.

''பிள்ளைக்கும், பெண்ணுக்கும் வித்தியாசமில்லேம்மா இப்ப.''

''எப்பவுமே இல்லே'' என்றாள் கமலினி மெல்ல.

தொடர்பு அறுந்து விட்டது. சோர்வுடன் ரிஸீவரை வைத்து விட்டுக் கமலினி டி.வி.யின் முன்னால் அமர்ந்தாள். ஆங்கிலச் செய்தி அறிக்கை முடிந்து வேறு ஏதோ காட்சி தெரிந்தது.

டி.வி. ஒலிப்பது சில சமயம் தெம்பாக இருந்தது. தனியாக இருக்கும்போது கூட யாரோ ஆள் இருப்பது போல. திரையில் தெரிந்தது ஒன்றும் சுவாரஸ்யமாக இல்லாவிட்டாலும் அந்த ஒலிக்காகப் போட்டு வைத்தாள். கீதா செய்த ஃபோனினால் வரக் கூடிய தூக்கம் கலைந்து போயிருந்தது.

''அவன் இனிமே வரமாட்டான்மா. புரிஞ்சுக்கோ.''

எவ்வளவோ முறை இந்த வார்த்தைகளைப் பலர் சொல்லிக் கேட்டாயிற்று. கேட்கும் போதெல்லாம் 'திக்'கென்கிறது. வார்த்தைகள் கொடூரமாகப் படுகின்றன.

''திரும்பி வரணும்னா வந்திருக்கலாம்.'' இதைத்தான் சபா பதியும் அடிக்கடி சொல்வார். அந்த எண்ணமே அவரைப் பொசுக் கென்று கண்ணை மூட வைத்திருக்கும்.

வாசல் அழைப்பு மணி ஒலித்தது. கமலினி விருக்கென்று நிமிர்ந்து உட்கார்ந்தாள். இந்த வீட்டு அழைப்பு மணிதானா என்று சந்தேகம் வந்தது.

மறுபடி ஒலித்தது, விடாமல் ஒரு அவசரத்துடன். இந்த மாதிரி அவன்தான் அழுத்துவான். பொறுமையில்லாதவன். ரகு. ரகுவா?

குபீரென்று பீறிட்ட உணர்ச்சி வெள்ளத்தில் திணறியபடி கமலினி எழுந்தாள்.

மீண்டும் ஒலித்தது விடாமல், இரண்டு முறை. இப்படித்தான் அவன் அழுத்துவான். சந்தேகமில்லை.

''வரேண்டா ரகு வரேன்'' என்றாள் கமலினி. ''நீ வருவேன்னு எனக்குத் தெரியும். நலல வேளை, நா அமெரிக்காவுக்குப் போயிடல்லே.''

வாசற் கதவு வெகு தூரத்தில் இருப்பது போல் தோன்றிற்று. அவள் வேக வேகமாக நடந்து கதவைத் திறந்தாள். வெளியிருட்டில் நின்றிருந்தவன் சடக்கென்று உள்ளே நுழைந்து கதவைத் தாழ்ப்பாள் போட்டான்.

கமலினி ஆர்வத்துடன் அவனைப் பார்த்தாள். ரகு இல்லை இவன். மளமளவென்று மனத்தில் பொங்கியிருந்த பரபரப்பு வடிந்து போயிற்று.

நல்ல சிவப்பாக, ஒடிசலான உருவமாக இருந்தான் இவன். இருபத்தி ஐந்து வயதுக்குள்தான் இருக்கும். மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க நின்றவன்,

''மாதாஜி, கொஞ்சம் நீர் கொடுங்கள்'' என்றான் தூய ஹிந்தியில்.

இன்னமும் திகைத்து நின்றிருந்த கமலினியிடம், ''நான் திருடவோ, கொள்ளை அடிக்கவோ வரவில்லை. மாதாஜி, என்னை

நம்புங்கள்'' என்றான். ''நான் பயங்கரவாதியும் இல்லை. என்னை நீங்கள் சோதனை போடலாம். என்னிடம் ஏதும் ஆயுதமில்லை.''

அவன் கைகளை விரித்து சட்டைப் பை, கால் சராய் பை எல்லாவற்றையும் திறந்து காண்பித்தான்.

''எனக்கு நீர் மட்டும் கொடுங்கள் தயவுசெய்து. நீங்கள் என் தாயைப் போலத் தெரிகிறீர்கள்.''

அந்த வார்த்தை என்னவோ செய்தது. இரத்தத்தில் சூடேற்றிற்று. அவளை சுறுசுறுப்பாக்கிற்று. ஃப்ரிஜ்ஜிலிருந்து நீர் பாட்டிலைக் கொண்டு வந்து கிளாஸில் நிரப்பி நிரப்பிக் கொடுக்க அவன் பாட்டில் நீரைக் காலி செய்தான்.

''ரொம்ப நன்றி மாதாஜி'' என்றான் முகத்தை துடைத்தபடி.

பட்டினி கிடந்தவன் போலக் கண்கள் உள்ளுக்குள் புதைந்து கிடந்தன. உடனடியாகச் சாப்பிடக் கொடுக்க என்ன இருக்கிறது என்று அவள் தீவிரமாக யோசித்தபடி

''சாப்பிட ஏதாவது வேணுமா?'' என்றாள். அவன் வியப்புடன் அவளைப் பார்த்தான்.

''நீங்கள் ரொம்பவும் நல்லவர் மாதாஜி. ஆனால் நான் உங்களைத் தொந்திரவு செய்யக் கூடாது.''

''தொந்திரவு இல்லை. சொல். எப்ப சாப்பிட்டே கடைசியாய்?''

''இரண்டு நாளாகிறது.''

''எங்கிருந்து வருகிறாய்?''

''ஸ்ரீநகரிலிருந்து.''

அவளுக்கு எல்லாம் புரிந்தது போல் இருந்தது.

அவள் கிடுகிடுவென்று சமையலறைக்குச் சென்றாள்.

''பத்து நிமிஷம் பொறு. உப்புமா கிண்டித் தருகிறேன். மதராசி உப்புமா கேள்விப்பட்டிருக்கியா?'' என்றாள் சகஜமாக.

அவன் கூச்சத்துடன் ஓரமாக நின்றான். ''கேள்விப் பட்டிருக்கேன் மாதாஜி. ஆனால் சிரமப்படாதீர்கள். நான் தாகத் தாலேயே செத்து விடுவேன் என்று நினைத்தேன். இங்கும் யாரோ என்னைத் துரத்தினார்கள். அதனால் உங்கள் கதவை இடித்தேன்.''

மேற்கொண்டு அவள் எதுவும் பேசாமல் காரணம் புரியாத ஒரு உற்சாகத்துடன் இஞ்சி, பச்சை மிளகாய், வெங்காயம் எல்லா வற்றையும் பொடிப் பொடியாக கனவேகமாய் நறுக்கி, தாளித்து, ரவையைக் கொட்டிக் கிளறினாள். பொல பொலவென்று வெந்து பதமானதும் தட்டில் வைத்து, அத்துடன் ஊறுகாயையும் வைத்து அவனிடம் கொடுத்து ''சாப்பிடு'' என்றாள்.

அவன் இன்னும் நம்ப முடியாமல் அவளைப் பார்த்து நன்றி சொல்லி அதை வாங்கிச் சாப்பிட ஆரம்பித்தான். அவன் சாப்பிடும் நாசூக்கைப் பார்த்து அவன் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும் என்று அவள் புரிந்து கொண்டாள்.

அவன் சாப்பிட்டு முடித்து, நீர் குடித்து அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''நான் யார் என்று தெரியாமலே நீங்கள் எனக்கு உணவளித்தீர்கள்.''

அவள் கருணையுடன் சொன்னாள். ''பசி என்கிறது எல்லாருக்கும் பொதுவானது. நீ யாருன்னு தெரிஞ்சுதான் அதை நா

உணர்ந்துக்க வேண்டியதில்லே. உனக்கு நல்ல பசின்னு நீ சொல்ல வேண்டியதில்லே. உன் கண்ணே சொல்றது. நீ யாருன்னு இப்பச் சொல்லு.''

''நா ஒரு காஷ்மீரி. அங்க இருக்கிற இனவெறிக்கு எதிராக் குரல் எழுப்பினதாலே என் குடும்பமே தண்டிக்கப்பட்டது. என் கூடப் பிறந்தவங்களும், என்னைப் பெத்தவங்களும் எங்கேன்னு எனக்கு இப்பத் தெரியாது. என் உயிரைக் காப்பாத்திக்கணும்னு நா எப்படியோ தப்பிச்சு ஓடி வந்தேன்.''

கமலினி அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்.

''மத்தவங்கள்ளாம் என்ன ஆனாங்கன்னுகூடத் தெரியாதா?''

''ஊஹூம். தெரியாது. இதுமாதிரி எத்தனையோ குடும்பங்கள். என்னை மாதிரி எத்தனையோ இளைஞர்கள். நிரபராதிகள். ஆனா எல்லாரும் சந்தேகத்தோடுதான் எங்களைப் பார்ப்பார்கள். இப்படி யார், என்னன்னு கூட விசாரிக்காம சாப்பாடு போட மாட்டார்கள். நீங்கள் தெய்வம்.''

''அத்தனை பெரிய வார்த்தை போடாதே'' என்றாள் கமலினி. ''நா ஒரு சாதாரண மனுஷி. உன்னைப் போல ஒரு பையனுடைய அம்மா.''

''எங்கே உங்க மகன்?'' என்றான் அவன் உள் அறைப் பக்கம் பார்வையைப் பதித்து.

''தெரியாது'' என்றாள் அவள் சாதாரணமாக.

அவன் வியப்புடன் அவளைப் பார்த்தான்.

''நிஜம்மாவே தெரியாது'' என்று அவள் லேசாகப் புன்னகைத்தாள். ''ரொம்பத் துடிப்பானவன். ரொம்ப கெட்டிக்காரன். இன்ஜினி

யரிங் படிச்சுண்டிருந்தான். எங்கிட்ட ரொம்ப பாசம். அநியாயத்தைக் கண்டு பொறுக்க மாட்டான். எமர்ஜென்ஸி வந்ததே தெரியுமா? அப்ப நீ குழந்தையா இருந்திருப்பே. என் மகனுக்கு அப்ப உன் வயசு இருக்கும். பேச, எழுத சுதந்திரமில்லாம போச்சேன்னு துடிச்சுப் போனான். ஊரெல்லாம் பயந்து வாயை மூடிக்கிட்டு இருக்கிறபோது உனக்கு என்னடான்னு எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். கேட்கல்லே. அதை எதிர்த்து வெளிப்படையாப் பேசுவான். ஒரு நாள் வெளியிலே போனவன் வீட்டுக்கே வரல்லே.''

எதிரில் அமர்ந்திருந்தவன் அனுதாபத்தோடு அவளைப் பார்த்தான்.

''அவரைப் பத்தித் தகவல் ஒண்ணும் பிறகு கிடைக்கல்லியா?''

''இல்லே.''

''அப்புறம் தேர்தல் வந்ததே? வேறு அரசு வந்ததே? அப்பவும் வரல்லியா?''

''ஊஹூம்.''

அந்த இளைஞன் தன் பிரச்னையை மறந்து இவளுடைய பிரச்னையைப் பற்றிக் கவலை கொண்டவன் போல் சற்று நேரம் பேசாமல் இருந்தான்.

''உங்களுக்கு வேறு யாரும் இல்லையா?''

''ஒரு மகள் இருக்கா அமெரிக்காவிலே.''

''நீங்கள் தனியாகவா இங்கே இருக்கிறீர்கள்?''

''ஆமாம். மகள் கூப்பிட்டுக்கிட்டே இருக்கா. எனக்குப் போக இஷ்டமில்லே. திடீர்னு ஒரு நாள் ரகு வந்து கதவை இடிச்சான்னா?''

என்றாள் தனக்குள் பேசிக் கொள்பவள் போல. ''இன்னிக்கு நீ பெல் அடிச்ச போது ரகுதான் வந்துட்டான்னு நினைச்சேன்.''

அவன் அவளை வினோதமாகச் சற்று நேரம் பார்த்தாள். பிறகு எழுந்து மேஜை மேல் இருந்த புகைப்படங்களைப் பார்க்க ஆரம்பித்தான்.

''மாதாஜி, இந்தப் படத்தில் இருப்பது யார்?'' என்றான் ஒரு படத்தைக் காண்பித்து.

''அதுதான் ரகு. என் மகன்'' என்றாள் அவள் பாசம் பொங்க.

''இவரா? ஆச்சரியமாக இருக்கிறது. எனக்குத் தெரியும் இவரை'' என்றான் அவன் நிதானமாக.

அவள் சடக்கென்று எழுந்து அவனுடைய தோளை பிடித்து உலுக்கினாள்.

''தெரியுமா? எப்படி? எங்கேயிருக்கிறான் என் மகன்?''

அவளுடைய வேகத்தைக் கண்டு அவன் அசந்து போனான்.

''என் அப்பாவுடைய கடையில் அவர் வேலை பார்த்தார். போட்டோ ஆல்பத்தில் இவர் முகத்தைப் பார்த்திருக்கேன்.''

கமலினியின் கண்களில் கிட்டத்தட்ட ஒரு வெறி மின்னிற்று.

''இப்ப எங்கே இருக்கான் சொல்லு? என் மகன் உயிரோடு தானே இருக்கான்? எனக்குத் தெரியும் அவன் சாகல்லேன்னு. சொல்லு.''

அவன் கமலினியின் கைகளை லேசாக விடுவித்தான். பிறகு போட்டோவையே தீவிரமாக பார்த்தபடி தலையை அசைத்தான்.

''இல்லை. அவர் உயிரோடு இல்லை.''

''பொய்!'' கமலினி படபடத்தாள். ''சும்மா சொல்லாதே.''

''இல்லே மாதாஜி. உண்மை. நான் அப்பச் சின்னவன். இவரைச் சரியா ஞாபகமில்லே. செத்துப் போயிட்டார்னு அப்பா சொன்னார்.''

அவள் வெறித்துப் பார்த்தாள். ''எப்படி? கொலை செய்யப் பட்டானா?''

''இல்லே. ஏதோ காய்ச்சல் வந்து போயிட்டார் தேர்தலுக்கு முன்னாடியே. என்னைப் போல அவரும் உயிரைக் காப்பாத்திக்க உங்களை விட்டு ஓடிப் போயிருக்கலாம்.''

கமலினி அவனைத் தீர்க்கமாகப் பார்த்தாள். ''போட்டோவை சரியாப் பாரு. இவன்தானா?''

''இவர்தான். மதராஸியானாலும் ரொம்ப நன்றாய் ஹிந்தி பேசுவார் என்று அப்பா சொல்வார்.''

கமலினி மெல்ல நகர்ந்து சோபாவில் அமர்ந்தாள். பிரமை பிடித்தவள் போல வெகுநேரம் பேசாமல் இருந்தாள்.

''என்னை மன்னியுங்கள் மாதாஜி. உங்கள் நம்பிக்கையை நான் இன்னிக்குத் தகர்த்து விட்டேன்'' என்றான் அவன் கவலையுடன்.

''இல்லே. இல்லே. தெய்வம்தான் உன்னைக் கொண்டு விட்டதுன்னு நினைக்கிறேன். நீ சொன்ன செய்தி ஒரு வகையிலே எனக்கு நிம்மதியாகூட இருக்கு'' என்றாள் அவள் மெல்ல.

அவன் புரியாமல் அவளைப் பார்த்தான்.

''ரகு கொலை செய்யப்படல்லேங்கற செய்தி எனக்கு நிம்மதியாயிருக்கு.''

அவன் ஏதும் பேசாமல் நின்றான்.

''அந்த நிம்மதி உங்கம்மாவுக்கும் கிடைக்கட்டும். எப்படியாவது அவள்கிட்ட போய்ச் சேர்ந்துடு.''

''ஆண்டவன் சித்தப்படி நடக்கும் மாதாஜி. நா கிளம்பறேன். உங்களுக்கு மறுபடி நன்றி சொல்லணும்.''

அவன் அவள் காலைத் தொட்டு வணங்கிக் கிளம்பினான்.

கதவருகில் செல்லும்போது, ''நீங்கள் தனியாக இருக்கக் கூடாது'' என்றான்.

''இருக்க மாட்டேன். இனிமே டில்லியிலே எனக்கு என்ன வேலை?''

அவன் வெளியில் நடந்து காரிருளில் சங்கமித்தான். சந்தேகமே படாமல் தனக்கு நீரும், உணவும் கொடுத்து உதவிய அந்தக் கிழவிக்குத் தன் நன்றிக் கடனைத் தீர்ப்பதற்கு அந்தப் பொய்யைச் சொல்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

கலைமகள் தீபாவளி மலர் 1990